# பொது முடக்கத்துக்குப் பேராதரவு தாருங்கள்!

## 8 தமிழ்க் கட்சிகள் கூட்டாக வேண்டுகோள்




“வடக்கு - கிழக்கில் நாளைமறுதினம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள பொது முடக்கத்துக்குத் தமிழ் பேசும் மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாம் உரிமையுடன் வேண்டுகின்றோம்” - என்று எட்டுத் தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரியுள்ளன.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது 8 தமிழ்க் கட்சிகள் இது தொடர்பில் கூட்டு அறிக்கையையும் வெளியிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி , ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியன இணைந்து இந்தக் கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளன.

2 ➤


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 01 புதன்கிழமை 18.10.2023 கதிர் 95



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்

### ஐ.நாவிடம் சஜித் கோரிக்கை



இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலை முடிவுக்கு கொண்டுவர அவசர பாதுகாப்பு சபைக் கூட்டத்தைக் கூட்டுமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

“காசா பகுதியில் உள்ள வைத்திய சாலை மீது நடத்தப்பட்ட 2➤

## வடக்கில் 9,543 ஏக்கர் காணி அபகரிப்பு விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!

### சிறீதரன் எம்.பி. கோரிக்கை

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் முப்படைகள், பொலிசார் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில், பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகத் திரட்ட முடிந்த 2➤



## காஸா வைத்தியசாலை மீதான தாக்குதல் பெரும் போர்க்குற்றம்

### சுமந்திரன் கடும் கண்டனம்



காஸாவில் உள்ள வைத்தியசாலை மீதான தாக்குதல் பெரும் போர்க்குற்றம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

2009 இல் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீதும் இலங்கை இராணுவம் 2➤

## ஐ.எம்.எஃப். கலந்துரையாடலில் வெற்றி விரைவில் 2ஆம் தவணை கிடைக்கும்!

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் தவணையை பெற்றுக்கொள்வதற்கான ஊழியர் மட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நோக்கில் இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றி அடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இரண்டாம் தவணை எதிர்வரும் இரண்டு வாரங்களில் கிடைத்திடும் என எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஆழமான பொருளாதார நெருக்கடியை இலங்கையால் ஒரே இரவில் சமாளிக்க முடியாது 2➤

## உங்களுடைய வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது மிஸ்டர் பிரசிடென்ட்?

### மனோ எம்.பி கேள்வி!



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த காலத்தில் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளும் காற்றில் பறந்துள்ளதாகவும் அன்று அவர் கூறியதற்கும் இன்று அவர் நடந்துகொள்வதற்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளதாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நடைபெற்ற, தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“இந்நாட்டில் சுதந்திரம் பெற்றோம், 2➤

## அரசமைப்பு சபை நீக்கிய பொலிஸ்மா அதிபரை சீனாவிலிருந்து மீண்டும் நியமித்த ஜனாதிபதி

பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் (பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான) டிரான் அலஸ் ஆகியோர் நாட்டில் இல்லாத நிலையில், பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கு அரசமைப்புச் சபை நேற்று எடுத்த முடிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு மணித்தியாலத்துக்குள் மாற்றியமைத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரை மீண்டும் நியமிப்பது தொடர்பான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உத்தரவுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவின் பீஜிங்கிலிருந்து உடனடியாக வழங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியும், பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சராக டிரான் அலஸ்/ம் இலங்கையில் இல்லாதபோது, பொலிஸ்மா அதிபரை அரசமைப்புச் சபை நீக்கியது பாரிய தவறு என அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## அரசமைப்பு சபை நீக்கிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது வெளிநாடு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் இரண்டு நாட்களில் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பொலிஸ்மா அதிபரின் பதவி நீக்கம் சதித்திட்டமா?, என சந்தேகம் நிலவுவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி இலங்கைக்கு வருவதற்கு முன்னர் போதைப்பொருள் கடத்தல்காரரைப் பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்பதை உடனடியாகக் கண்டறியவுள்ளதாகவும் அந்தச் சிரேஷ்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும் பொலிஸ/க்குப் பொறுப்பான மக்கள் பாதுகாப்பு அமைச்சரும் நாட்டில் இல்லாத வேளையில் பொலிஸ்மா அதிபரைப் பதவியில் இருந்து நீக்குவது நாட்டிலுள்ள முழுப் பொலிஸ் திணைக்களத்தையும் முடக்குவதற்குச் சமமானது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

## உங்களுடைய வாக்குறுதிகளுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நாம் கொண்டாடும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும் என ஜனாதிபதி விக்ரமசிங்க வாக்குறுதி அளித்திருந்தார்.

13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் வாக்குறுதி வழங்கினார்.

13இல் பொலிஸ், காணி அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத் தப்படாது என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எம்.பி விக்கினேஸ்வரனை துணைக்கு அழைத்துக் கொண்டு வடக்கில் மாகாண நிர்வாக குழு அமைப்போம் என வாக்குறுதி அளித்தார்.

தொல்பொருள் திணைக்களத்தை அழைத்து காணிகளை விடுவியுங்கள் என கட்டளை இட்டார். திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி விலகினாரே தவிர ஜனாதிபதியின் கட்டளை நிறைவேறவில்லை.

தற்போது தேர்தல்களை பிற்போட சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது.

ஜனாதிபதி நேரடியாகச் சொன்னாலும், அவருக்கு நேரடி நெருக்கமாக அவரது அரசில் இருப்போர் சொன்னாலும் எமக்கு ஒன்றுதான். இப்போது ஜனாதிபதி முறைமையை அகற்றப் போகிறேன் என்கிறார். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை துணைக்கு அழைத்துக்கொண்டு நாடாளுமன்ற தேர்தல் முறையை மாற்றி தமிழ் பேசும் பிரதிநிதித்துவங்களுக்கு ஆப்பு வைப்பேன், என சொல்லாமல் சொல்கிறார்.

பிரிட்டீஷ் ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிசை அழைத்து, உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு விசாரணையை கையளிப்போம், என நாடாளுமன்றம் வந்து வாக்குறுதி அளித்திருந்தார்.

இப்போது ஜேர்மனிக்கு போய் சர்வதேச விசாரணைக்கு அனுமதிக்க மாட்டோம்!, என்கிறார். விசாரணைகளுக்காக உள்ளூரில் மீண்டும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதாக சொல்கிறார்.

பெருந்தோட்டத் துறையில் காணி பிரச்சினைக்கு இதோ தீர்வு, அதோ தீர்வு என்று சில அமைச்சர்கள் கூறினார்கள். ஆனால், எதனையும் செய்யவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதே நாடாளுமன்றத்தில், பிரதமராக சில காலம் இருந்தபோது, நாடாளுமன்றத்தில் நான் எழுப்பிய கோரிக்கையை ஏற்று, உடனடியாக பெருந்தோட்டங்களில் உள்ள பயிரிடப்படாத தரிசு நிலங்களை பிரித்து, பெருந்தோட்ட குடும்பங்களுக்கு வழங்குகிறேன், என வாக்குறுதி அளித்தார்.

அதற்கு “மனோ கணேசன் திட்டம்” என பெயரும் வைக்கிறேன் எனவும் பகிரங்கமாக நாடாளுமன்றத்தில் வாக்குறுதி வழங்கினார்.

“ஐயா சாமி, எனது பெயர் வேண்டாம், எனது மக்களுக்கு காணி உரிமையை கொடுங்கள். அது போதும்” என்று அப்போதே நான் அவருக்குப் பதிலளித்தேன்.

இன்று அந்த வாக்குறுதிக்கு என்ன நடந்தது மிஸ்டர் பிரசிடென்ட்?

கடைசியாக இப்போது மயிலத்தமடு கால்நடை மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில், அதிகாரிகளை அழைத்துப் பணிப்புரை விடுத்தார். ஆனால், அங்கே புத்தர் சிலையைக் கொண்டு வந்து நிறுத்தி உள்ளார்கள். அங்குள்ள அம்பிட்டிய பிக்கு வாயைத் திறந்தால் தெருச்சண்டைக்காரர் போன்று பேசுகிறார்.

மேய்ச்சல் தரையில் பாரம்பரியமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வந்த மக்களுக்கு நிலம் கையளிக்கப்படுவது ஒருபுறம் இருக்க, இப்போது கௌதமரையும் அங்கே இவர்கள் கொண்டு வந்து நிறுத்தி இருப்பது, மயிலத்தமடு, மாடுகளுக்கே அடுக்காது!, எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ)

## ஐ.எம்.எஃப். கலந்துரையாடலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும், எனவே ஸ்திரத்தன்மை மற்றும் இயல்பு நிலையை மீட்டெடுக்க பல சர்வதேச நாடுகளுடன் விவாதங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை பொது மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் இலங்கையில் இருந்த நிலைமை தற்போது மாறியுள்ளது என்பதோடு, சில வேறுபாடுகளைக் களைவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான விவாதங்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (க)

## காஸா வைத்தியசாலை மீதான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதே போன்றே தாக்குதல் நடத்திவிட்டு நொண்டிச் சாட்டையே தெரிவித்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வடக்கில் 9,543 ஏக்கர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்களைக் கொண்டு, தன்னால் தயாரிக்கப்பட்ட விவரண அறிக்கையை சமர்ப்பித்து, இன்றையதினம் நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4,378.8 ஏக்கரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 2,433.79 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,578.27 ஏக்கரும், வவுனியா மாவட்டத்தில் 1,021.55 ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் 130.77 ஏக்கருமாக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 9,543.18 ஏக்கர் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுத் தாக்குதலில் சுமார் 500 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே தற்போது நடந்து வரும் போரில் ஆயிரத்து 400 இஸ்ரேலியர்களும், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். வைத்தியசாலை மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட இப்படியான அனைத்துச் சம்பவங்களும் படுகொ லையாகும்.

இந்தப் போர்ச் சூழ்நிலையை சமரசப்படுத்த ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையிலான கூட்டத்தை உடன் கூட்டி, அத்தரப்புகளின் தலையீட்டுடன் இந்த பயங்கரவாதத்தையும், அரச பயங்கரவாதத்தையும் உடனடியாக நிறுத்தக் கோருவதற்கான பிரேரணையை முன்வைக்குமாறும் கோருகின்றேன்.” - என்றார். (அ)

## பொது முடக்கத்துக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்து, 75 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், தமிழ் பேசும் மக்களாகிய நாம், உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து நீதி கோரி நிற்கின்றோம்.

போர் முடிந்து 14 வருடங்கள் உருண்டோடிவிட்டன. இருந்தும், இதுவரையில் எமக்கு நீதி வழங்கப்படவில்லை. மாறாக, எமது துன்பங்களும் துயரங்களும் நீடித்து நிற்கின்றன.

எம்மீதான அழுத்தங்களும் நெருக்குதல்களும் தொடர்கின்றன. எமது தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எமது பெரும்பான்மைப் பலத்தை சிதைத்து, இருப்பை பலவீனப்படுத்தி, உரிமை கோரி நாம் எழுந்து நிற்க முடியாத நிலைமையைக் காலப்போக்கில் ஏற்படுத்தும் இலக்குடன், அரச மட்டத்திலும் - அதன் ஆதரவோடும் பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது தாயகத்தில், வரலாற்று ரீதியாக எமது வழிபாட்டு தலங்கள் அமைந்திருந்த பல்வேறு இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கிய கட்டளைகள் மீறப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் குருந்தூர்மலை, திருகோணமலையில் கன்னியா மற்றும் விளையாட்டரங்க சுற்றாடல், யாழ்ப்பாணத்தில் தையிட்டி ஆகிய இடங்களில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. குருந்தூர்மலையிலும், தையிட்டியிலும் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. திருகோணமலையில் இலுப்பைக்குளத்தில், விகாரை ஒன்றுக்கான முன் நடவடிக்கைகள், ஆளுநரின் கட்டளையையும் மீறி. மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொல்பொருள் திணைக்களம், வனத் திணைக்களம். வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன எமது பெருந்தொகையான காணிகளை ஆக்கிரமித்து அபகரித்துள்ளன.

காணிகள் மீளக் கையளிக்கப்படும் என்று அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

இதேவேளையில், மட்டக்களப்பு மாவட்டத்தில். மயிலத்தமடு - மாதவனை பிரதேசத்தில் தமிழ்ப் பண்ணையாளர்களின் பல்லாயிரக்கணக்கான கால்நடைகளின் மேய்ச்சல் தரவையாக மிக நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த பாரிய பிரதேசத்தை, சிங்களக் குடியேற்ற வாசிகள் ஆக்கிரமித்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்ப் பண்ணையாளர்களின் கால் நடைகள் ஆக்கிரமிப்பாளர்களால் பெருந்தொகையில் பிடிக்கப்பட்டும், சுடப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளன. இதனால் பண்ணையாளர்களின் வாழ்வே இருண்டு போய் உள்ளது. பயிர் அறுவடை முடிந்தவுடன் குடியேற்ற வாசிகள் வெளியேறி விடுவார்கள் என்று அரச தரப்பில் கடந்த வருடம் கொடுக்கப்பட்ட வாக்குறுதி காற்றோடு கலந்து போய் பல மாதங்கள் ஆகிவிட்டது.

ஆக்கிரமிப்பு தொடர்கின்றது. மறுபுறத்தில், குருந்தூர்மலை ஆலய வழக்கில் எமது மக்களின் வழிபாட்டு உரிமையை ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்த முல்லைத்தீவு நீதிபதி, அச்சுறுத்தல்கள் மற்றும் கொலை மிரட்டல்களின் விளைவாக நாட்டை விட்டே தப்பிச் சென்றுள்ளார்.

யுத்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான படுகொலைகளில், சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த, சிலவற்றுக்கு வழக்குகள் தொடுக்கப்பட்டதனை நீங்கள் அறிவீர்கள்.

மூதூர் - குமாரபுரம் படுகொலைகள் தொடர்பான வழக்கு அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டு, சிங்கள யூரி சபையினர் முன்பு விசாரணை செய்யப்பட்டதன் முடிவில், எதிரிகளான இராணுவத்தினர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டதை யார்தான் மறக்க முடியும்? அதைப்போலவே, மிருசுவில் படுகொலைகள் பற்றிய வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த இராணுவ அதிகாரிக்கு, கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த பின், பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டதை எவரும் மறந்துவிட முடியாது.

மேலும், யுத்தம் மீண்டும் வெடித்த போது, 5 தமிழ் மாணவர்கள் திருகோணமலை கடற்கரையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலும் நீதி மறுக்கப்பட்டது. கொழும்பில் வைத்து கடத்தப்பட்ட 11 தமிழ் இளைஞர்கள் திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவங்களிலும் உண்மை புதைக்கப்பட்டு விட்டது.

இவை எல்லாம் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைச் செய்வோர் தண்டிக்கப்படாமல், தப்பிவிடுவார்கள் என்பதற்கு உறுத்தும் உதாரணங்கள் ஆகும்.

இப்போது, நீதிக்காக துணிந்து நின்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு நேர்ந்திருக்கும் கதி தொடர்பிலும் உண்மை மழுப்பப்பட்டு, மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில், இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் அநீதிகளையும், நீதி மறுக்கப்படுவதையும் உலகத்தின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வரும் நோக்கத்துடனும், எமது மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அவற்றில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதை கண்டித்தும், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரவையை ஆக்கிரமித்து இருப்போரை வெளியேற்றக் கோரியும், எமது தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் எனப்படும் ஒரு பொது முடக்கத்துக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளாகிய நாம் ஒன்றிணைந்து அழைப்பு விடுக்கின்றோம்.

கிழக்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இதற்கு வடக்கு ஆதரவு தர முன்வந்துள்ளன. இந்நிலையில், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நிகழவுள்ள இந்தப் பொது முடக்கத்திற்கு, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாம் உரிமையுடன் வேண்டுகின்றோம்.

மேலும், எம் மக்கள் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மனித உரிமை இயக்கங்கள், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியங்கள் உட்பட மாணவர் அமைப்புக்கள், மகளிர் உரிமை நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், வணிகர் கழகங்கள், சிவில் சமூக சங்கங்கள் மற்றும் மத ஸ்தாபனங்கள் உட்பட, பல்துறை சார்ந்த செயற்பாட்டு அமைப்புக்களின் ஆதரவையும் பங்களிப்பையும் இந்த மக்கள் போராட்டத்தில் நாம் நாடி நிற்கின்றோம்.” - என்றுள்ளது. (அ)

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை
எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி உள்ளூராட்சி ஊழியர்கள் போராட்டம்



(ஏ.எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி, இன்று புதன்கிழமை திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களையும் சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள், கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலகத்திற்கு முன்னால் ஒன்றுகூடி, அங்கிருந்து ஆளுநர் செயலகம் வரை பேரணியாகச் சென்று, அங்கு நீண்ட நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

இதில் கல்முனை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று மாநகர சபைகளில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

# தென்கிழக்கு பல்கலை முதலாம் வருட மாணவர் அங்குரார்ப்பண நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் ஏற்பாட்டில் 2021 - 2022 கல்வியாண்டிற்கான முதலாம் வருட மாணவர் அங்குரார்ப்பண நிகழ்வு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில், பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாசில் தலைமையில் இடம்பெற்றது.



2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி நிகழ்நிலை ஊடாக இம்மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும்கூட நேரடியான கல்வி நடவடிக்கைகளுக்காக இம்மாணவர்கள் தற்போது பல்கலைக்கழகத்திற்கு உள்ளே அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் அவர்கள் கலந்துகொண்டார்.

முதலாம் வருட மாணவர்கள் 400 பேர் இவ்வருடம் கலை கலாசார பீடத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் சமய அனுஷ்டானத்தைத் தொடர்ந்து, வரவேற்புரை இடம்பெற்றது. இவ்வரவேற்புரையினை சமூகவியல் துறைத் தலைவரான பேராசிரியர் எஸ்.எம். அய்யூப் நிகழ்த்தினார். கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாசில் பீடம் பற்றிய அறிமுகத்தை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து துறைத் தலைவர்கள் சார்பில் அரசியல் விஞ்ஞானத் துறையின் தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பார் உரையாற்றினார்.

நிகழ்வின் பிரதம அதிதியான இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அங்குரார்ப்பண உரையை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், இன்றைய தொழிற்சந்தைக்கு ஏற்றாற் போல் கல்வி நடவடிக்கைகள் மாற்றப்பட வேண்டும் என்பதற்கிணங்க பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார். தனியே கல்வியுடன் நிறுத்தி விடாது, திறமையை வளர்ப்பதன் மூலமே தொழிற்சந்தைக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்க முடியும். இதற்கு இப்பல்கலைக்கழகமும் கலை கலாசார பீடமும் பங்களிப்புச் செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

உலக வங்கியின் நிதி உதவியினூடாக கலை கலாசார பீடம் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் நவீன சாதனங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் இவற்றைப் பயன்படுத்தி, திறன் உள்ள மாணவர்களாக வருவதற்கான வாழ்த்துக்களையும் உபவேந்தர் தெரிவித்தார்.

கலை கலாசார பீட மாணவ பேரவையினால் தயாரிக்கப்பட்ட ‘செயல்’ குறுந்திரைப்படம் புதுமுக மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பீடத்தின் உறுப்பினர்களுக்கும் காண்பிக்கப்பட்டு நிகழ்வு நிறைவு பெற்றது.



# காஸா மருத்துவமனை மீது வான்வழித் தாக்குதல் இஸ்ரேல் நடத்திவிட்டு ஹமாஸ் மீது பழிபோடுகிறது!

## ஐ.நா.வுக்கான பாலஸ்தீன தூதர் தெரிவிப்பு



காஸா நகரில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனை மீது நேற்று இரவு இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 500 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், காஸா மருத்துவமனை மீதான ரொக்கெட் தாக்குதல் நடத்தியது இஸ்ரேல்தான் எனவும், தாக்குதலை நடத்திவிட்டு ஹமாஸ் மீது இஸ்ரேல் அதிபர் பழி சுமத்துவதாகவும் ஐ.நா.வுக்கான பாலஸ்தீன தூதர் தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் படையினர் நடத்திய திடீர் தாக்குதலுக்கு இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் மூலம் பதிலடி கொடுத்து வருகிறது. இதுவரையில் 2,778 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டும் 9,700 பேர் காயமடைந்தும் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

காஸாவை முழுவதுமாக முற்றுகையிட்டுள்ள இஸ்ரேல், வடக்கு காஸாவில் உள்ள மக்கள் தெற்கு காஸாவுக்கு வெளியேற வேண்டும் என்று எச்சரித்தது. உயிரைப் பாதுகாத்து கொள்ள சுமார் 10 லட்சம் பேர் வெளியேறி தெற்கு காஸாவுக்கு நடைப்பயணமாகச் சென்று தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இந்நிலையில், தெற்கு காஸாவின் ராஃபா, கான் யூனிஸ், மத்திய காஸா பகுதிகளிலும் இஸ்ரேல் நேற்று குண்டுகளை வீசி தொடர் தாக்குதல் நடத்தியதில், காஸா சிட்டியில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனையில் மருத்துவ உதவிகளுக்காகத் தஞ்சம் அடைந்திருந்த பாலஸ்தீனர்கள் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக காஸா சுகாதார அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

மருத்துவமனையில் அப்பாவி மக்கள், நோயாளிகள் கொல்லப்பட்ட சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

காஸாவில் இருந்து எகிப்துக்கு வெளியேற இருந்த ஒரே ராஃபா எல்லையோர வழித்தடமும் சேதமானதால், உணவு, குடிநீர், மின்சாரம், மருத்துவ வசதி இல்லாமல் தெற்கு காஸாவின் தெருக்களில் லட்சக்கணக்கான பாலஸ்தீனர்கள் தவித்துவருகின்றனர்.

இந்தச் சூழலில், காஸாவில் உள்ள மருத்துவமனைக்கு எதிராக இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கைகள் இன்னும் பரிசீலனையில் இருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளின் செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டானியல் ஹகாரி தெரிவித்துள்ளார்.

காஸாவில் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஹமாஸ் நடத்திய தாக்குதல் எனவும், நூற்றுக் கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றதற்கான காரணம் குறித்து தனக்கு இன்னும் உறுதியாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையில், காஸா நகரில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனை மீது செவ்வாய்கிழமை இரவு வான்வழித் தாக்குதல் நடத்தியது இஸ்ரேல்தான் எனவும் தாக்குதலை நடத்திவிட்டு ஹமாஸ் மீது இஸ்ரேல் அதிபர் பழி சுமத்துவதாகவும் ஐ.நா.வுக்கான பாலஸ்தீனத் தூதர் தெரிவித்துள்ளார்.

காஸா மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பாலஸ்தீன அதிபர் மொகமட் அப்பாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். மருத்துவமனை மீதான தாக்குதலில் ஏராளமானோர் பலியான நிலையில் 3 நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (04)

# மீண்டும் அணு ஆயுதச் சோதனைகள் ரஷ்ய நாடாளுமன்ற அவை ஒப்புதல்

சர்வதேச ஒப்பந்தத்தின் கீழ் ரஷ்யா நிறுத்திவைத்துள்ள அணு ஆயுதச் சோதனைகளை மீண்டும் தொடங்குவதற்கு வழி செய்யும் சட்டமூலத்துக்கு அந்த நாட்டு நாடாளுமன்ற கீழவை நேற்று ஒப்புதல் அளித்தது.

அணு ஆயுதங்களை சோதனை செய்வதற்காக கட்டுப்பாடுகளுக்கு பரஸ்பரம் ஒப்புக் கொண்டு அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 178 நாடுகள் சர்வேச ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன. அதன்படி, புதிதாக அணு ஆயுதச் சோதனைகள் நடத்துவதை அந்த நாடுகள் தவிர்த்து வந்தன.

இந்த நிலையில், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்தது. இந்தப் போரில் அமெரிக்காவும், அதன் மேற்கத்திய கூட்டணி நாடுகளும் நேரடியாகத் தலையிட்டால் அவை வரலாற்றில் சந்தித்திராத மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும், என்று ஆரம்பம் முதலே ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் எச்சரித்து வருகிறார்.


உக்ரைனோடு ஒப்பிடுகையில் ரஷ்யா பன்மடங்கு பலம் வாய்ந்ததாக இருந்தாலும், நேட்டோ கூட்டணி நாடுகளுடன் பாரம்பரிய முறையில் போரிடுவது (அணு ஆயுதப் பயன்பாடு இல்லாத போர்) ரஷ்யாவுக்குச் சாதகமாக அமையாது. இதன் காரணமாகவே, அந்த நாடுகள் மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷ்யா மிரட்டல் விடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய நிலையில், உலகிலேயே ரஷ்யாவிடம்தான் எண்ணிக்கையிலும், சக்தியிலும் அதிக அணு ஆயுதங்கள் உள்ளன. இந்தப் போரில் அமெரிக் காவும், பிற மேற்கத்திய நாடுகளும் உக்ரைனுக்கு கோடிக் கணக்கான டொலர் மதிப்புக் கொண்ட ஆயுதங்களை வழங்கி உதவினாலும், அதில் நேரடியாகப் பங்கேற்பதைத் தவிர்த்து வருகின்றன. இதற்கு, ரஷ்யாவின் அணு ஆயுத பலமும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அணுசக்தியால் இயங்கும், அணு ஆயுதம் ஏந்தி உலகில் எந்த மூலைக்கும் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய புதிய தலைமுறை ஏவுகணையான புரேவெஸ்ட்னிக்கை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளதாக புடின் கடந்த 5 ஆம் திகதி அறிவித்தார்.

அப்போது அவர், 'அணு ஆயுதச் சோதனைகள் தடை ஒப்பந்தத்தில் ரஷ்யா கையொப்பமும் இட்டு, அதற்கு சட்ட அங்கீகாரமும் வழங்கியுள்ளது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள அமெரிக்கா, இதுவரை அதற்கு சட்ட அங்கீகாரம் அளிக்கவில்லை. எனவே, ரஷ்யா வழங்கியுள்ள சட்ட அங்கீகாரத்தை ரத்துச் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன' என்றார்.

அதன்படி, அணு ஆயுதச் சோதனைகள் தடை ஒப்பந்தத்துக்கான சட்ட அங்கீகாரத்தை ரத்து செய்வதற்காக ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழவையில் நேற்றுக் கொண்டு வரப்பட்ட சட்டமூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (04)



# கொங்கோ படகு விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது



மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் (டிஆர் கொங்கோ) ஏற்பட்ட படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது.

அந்த நாட்டின் கொங்கோ ஆற்றில் 300 க்கும் மேற்பட்டவர்களுடன் கடந்த வாரம் சென்று கொண்டிருந்த படகு ஒன்று, நடுவழியில் கவிழ்ந்தது. அளவுக்கு அதிகமாக ஆள்களை ஏற்றிச் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தற்போது தெரிவித்துள்ளனர்.

விபத்துப் பகுதியிலிருந்து இது வரை 189 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இது தவிர, விபத்தில் காணாமல்போன 150 க்கும் மேற்பட்டவர்களை மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர்.

கொங்கோவில் போதிய சாலை வசதிகள் இல்லாததால் அங்கு நீர்வழிப் போக்குவரத்து அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இருந்தாலும், அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வது, போதிய பராமரிப்பு இல்லாதது போன்ற காரணங்களால் அங்கு அடிக்கடி படகு விபத்துகள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (04)

# இறக்காமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அகரத்தின் சுவடிகள் - உன்னத கௌரவம் நிகழ்வு







(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலகத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட “அகரத்தின் சுவடிகள் - உன்னத கௌரவம்”

எனும் உலக ஆசிரியர் தின நிகழ்வு நேற்று, பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாட்டின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள 22 பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் 45 ஆசிரியர்களுக்கு அவர்களது அர்ப்பணிப்பான சேவைகளுக்காக “அகரத்தின் சுவடிகள் - உன்னத கௌரவம்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், பெண்கள் மற்றும் சிறுவர்களின் நலன், பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் அவர்களது வளமான எதிர்காலத்திற்காக அர்ப்பணிப்புடன் மாவட்டத்தில் சிறந்த அரச சேவையாற்றிவருவதனைப் பாராட்டும் வகையில், பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். றஸ்ஸான் (நளீமி), அதிதியாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், நிருவாக உத்தியோகத்தர்கள் எம்.எம்.எம். தௌபீக், எச்.பி. இந்திரசிறி பண்டார ஆகியோரும், சிறப்பு அதிதியாக மாவட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆர்.எம்.ஏ.பி. சுரஞ்சி விஜேரட்னவும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், பாலர் பாடசாலை ஆசிரியர்களின் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## அட்டாளைச்சேனை சம்பு நகர் அல்-மினா வித்தியாலயத்தில் நிலக்கடலை பயிரிடல்

(கே.எ.ஹமீட்)

அட்டாளைச்சேனை சம்பு நகர் அல்-மினா வித்தியாலயத்தில் தரம் 5 மாணவர்களின் நிலக்கடலை பயிரிடும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இன்று வகுப்பாசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜீ.ஹம்சார் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ் பிரதம அதிதியாகவும், பிரதி அதிபர் எம்.ஐ.ஹாசீம் கௌரவ அதிகமாகவும் கலந்து கொண்டு, தரம் ஐந்து மாணவர்களுடன் இணைந்து பயிரிடும் வேலைத்திடத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக, பாடசாலையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.






## 120 கண்புரை நோயாளர்களுக்கு அம்பாறையில் இலவச சிகிச்சை

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த நான்கு வருடங்களாக சத்திரசிகிச்சைக்காக காத்திருந்த 120 கண்புரை (கட்ராக்ட்) நோயாளருக்கு, கண்புரை சத்திரசிகிச்சை இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லண்டன் புனர்வாழ்வும் புதுவாழ்வும் (Assist RR - UK) என்ற அமைப்பு, அம்பாறை பொது வைத்தியசாலையில் இந்த சத்திர சிகிச்சைகளை முற்றிலும் இலவசமாக நடத்தி வைத்தனர்.

புனர்வாழ்வும் புது வாழ்வும் அமைப்பின் தலைவர், பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் மற்றும் இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோர் இத்திட்டத்தை முன்னின்று செயற்படுத்தினர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் ஜயசிறி டயஸ் தலைமையிலான குழுவினர் இந்த சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

இந்த மனிதாபிமானப் பணிக்கு மலேசியா ஆனந்தா பவுண்டேஷன் மற்றும் அலாகா பவுண்டேஷன் அமைப்பினரும் அனுசரணை வழங்கியிருந்தார்கள்.



## தொழில் முயற்சியளர்களுக்கான கரித்தாஸ் பயிற்சிச் செயலமர்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் கரித்தாஸ் மிசெரியோவின் நிதியுதவியுடன், திருகோணமலை எகெட் கரித்தாஸ் அனுசரணையுடன், புதிய தொழில் முயற்சியளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு நிறுவன கேட்போர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது

குறித்த நிகழ்வானது, பணிப்பாளர் அருட்பணி. கலாநிதி பி.போல் றொபின்சன் தலைமையில் நடைபெற்றது.

எகெட் கரித்தாஸ் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான கே.ரஜித், ஏ.எம்.பிரசாத், எம். டினேஷ் ஆகியோர் இணைந்து இச்செயலமர்வினை முன்னெடுத்தனர்.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SEARCH NEAR VEHICLES
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# காசா மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகள் உலக சுகாதார அமைப்பு வேண்டுகோள் விடுத்தது

காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் உடனடியாகச் சென்றடைய வேண்டும் என உலக சுகாதார அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. காசாவுக்கான உணவு, மின்சாரம், குடிநீர் என அனைத்தையும் இஸ்ரேல் நிறுத்தியுள்ளது. இதனால், காசா மக்கள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றனர். உணவு, குடிநீர் கிடைக்காமல் திணறி வருகின்றனர்.

இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமடைந்து வரும் நிலையில், காசா மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு சேர்ப்பது சர்வதேச மனிதாபிமான அமைப்புகளுக்குச் சவாலாக உள்ளது.

இந்தச் சூழலில், காசா மக்களுக்கு அடிப்படை உதவி வழங்குவதற்கான வாய்ப்புகள் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் கிழக்கு மத்திய தரைக்கடல் பிராந்திய இயக்குநர் டொக்டர் ரிச்சர்ட் பிரென்னன் கூறுகையில், "காசாவில் நிலைமை மிகவும் மோசமடைந்து வருகிறது. மக்கள் மருத்துவ வசதி, உணவு, குடிநீர் இல்லாமல் திணறி வருகின்றனர். அவர்களுக்கு உடனடியாக உதவி வழங்கப்பட வேண்டும். மனிதாபிமான உதவிகள் காசா மக்களை அடைவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். இது குறித்து நாங்கள் உலக நாடுகளின் தலைவர்களிடம் பேசி வருகிறோம்" என்று தெரிவித்தார்.

ஐ.நா. சபையின் பாலஸ்தீன அகதிகள் அமைப்பின் தலைவர் பிலிப் தகவல் வழங்குகையில்,

இஸ்ரேல் ராணுவ தாக்குதல்களால் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. மருத்துவமனை சவக் கிடங்குகளில் உடல்களை வைக்க இடமில்லை. எனவே, குழந்தைகளின் உடல்களை ஐஸ்கிறீம் வாகனங்களில் உள்ள குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்து வருகிறோம். உடல்களை வைப்பதற்கான சிறப்புப் பைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

காசா பகுதி மருத்துவமனைகளில் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகிறோம். எரிபொருள் இருப்பு தீர்ந்து வருவதால் மருத்துவமனைகளும் முடங்கும் நிலை உருவாகி இருக்கிறது, என்று தெரிவித்துள்ளார். (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.10.2023இல் வெளியிடப்பெற்றது.